# ஈழத்துப்பூராடனார் நூல்கள் ஓர் ஆய்வு

LIBRARY
Eastern University, Sri Lanka.

திரு. அழகையா விக்னேஸ்வரன்

சுட்டிலக்கம் – MA (T) 04

முதுகலைமாணிப் பட்டத்தேர்வின் ஒரு பகுதியை நிறைவுசெய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் மொழித்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை

MA18
Thesis
Library - EUSL

மொழித்துறை,
கலைகலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

2005 – 2006

PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை

முதுகலைமாணிப்பட்டத்தை நிறைவுசெய்யும் பொருட்டு சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரை 'ஈழத்துப்பூராடனார் நூல்கள் ஓர் ஆய்வாகும்' ஈழத்துப்பூராடனார் 1950கள் தொடக்கம் இன்றுவரை இலக்கியப் பணியைச் செய்துவருகின்றார். இவரால் படைக்கப்பட்ட வரலாறு தொடர்பான கட்டுரைகள், கவிதைகள், நாடக ஆக்கங்கள், காவியப் படைப்புக்கள், மொழிபெயர்ப்பு முயற்சிகள் என்பன பத்திரிகைகளில் வெளிவந்தன. பின் இம்முயற்சி நூல்வடிவம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பைச் சேர்ந்த விபுலானந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் வரிசையில் புலவர்மணியின் மாணாக்கனாகத் திகழ்ந்து அவர்தம் வழிகாட்டலின் பேறாக இலங்கை மற்றும் மட்டக்களப்புப் பிரதேச மக்கள் வரலாறும் வாழ்வும் பற்றியும் நூல்களைப் படைத்து இன்று புலம்பெயர்ந்த கனடா தேசத்திலும் தமிழிலக்கியப் பணியைச் செய்துவருகின்றார்.

இலங்கை எழுத்தாளர் வரிசையில் இவரும் ஒருவராக கருதப்பட்டு இலக்கிய உலகில் முக்கியம் பெறுகின்ற வேளையில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் இவர் பேசப்படும் அளவிற்கு இவரது படைப்புக்கள் தமிழறிஞர்கள் மத்தியில் வரவேற்கப்பட்டன. இந்தவகையில் இன்றுவரை இலங்கை வரலாறு, மட்டக்களப்பு வரலாறு, மக்கள் வாழ்வியல் அம்சங்கள், தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு, கிரேக்க நாடக தமிழ்மொழி பெயர்ப்புக்கள், பழந்தமிழ் இலக்கிய காவிய நோக்கு, மட்டக்களப்புப் பிரதேச மொழிவழக்கு, மின்கணனி எழுத்துச் சீர்திருத்தம் என பல அம்சங்கள் பற்றி எழுதியுள்ளார்.

இவ்வாய்வு ஏழு அத்தியாயங்களாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. முதலாம் அத்தியாயம் ஈழத்துப்பூராடனார் அறிமுகமாகும். இதில் அவரது பிறப்பு, கல்வி, ஆற்றிய பணிகள், அவர் பெற்ற சிறப்புக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் அத்தியாயம் ஈழத்துப்பூராடனார் வரலாற்று நூல்கள் ஆகும். இதில் அவரது வரலாற்று நூல்கள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. மூன்றாம் அத்தியாயம் இலக்கண நூல்கள் ஆகும். இதில் அவர் எழுதிய இலக்கணம் சார்ந்த நூல்களும் அவரது எழுத்துச் சீர்திருத்த சிந்தனைகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. நான்காம் அத்தியாயம் செய்யுள் நூல்கள். இதில் அவரது சில செய்யுள் சார்ந்த நூல்கள் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. ஐந்தாம் அத்தியாயம் உரை எழுதுதலும் ஆய்வு நூல்களுமாகும். இதில் அவரது உரைத்திறன் பற்றியும் அவரது ஆய்வுத்திறன் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. ஆறாம் அத்தியாயம் மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகும். இதில் அவரது மொழிபெயர்ப்புப் பற்றியும் அவர் மொழிபெயர்த்த நூல்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. ஏழாம் அத்தியாயம் தொகுப்பும் மதிப்பீடும் ஆகும்.

**ஆய்வாளன்**

## ஆய்வின் நோக்கம்

மட்டக்களப்பை சேர்ந்த விபுலானந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்றவர்களின் வழியில் இலக்கியங்களை படைத்து வருபவர் ஈழத்தப்பூராடனார். இவர் இலங்கை வாழ் தமிழ், சிங்கள மக்கள் வரலாறும் வாழ்வியலையும் பற்றி பல நூல்களை ஆக்கி வெளியிட்டு வரும் இவ்வேளையில் தமிழறிஞர்கள் மத்தியில் இவரது நூல்கள் அறியப்பட வேண்டும் என்னும் நோக்கில் இவை ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

இவர் மட்டக்களப்புப் பிரதேசத்தின் பூர்வீக வரலாறுகள் மக்கள் வாழ்வியல் தமிழ்ப்பெரும் அறிஞர்கள் பற்றிய வெளியீடுகளை உலகம் அறியும் வண்ணம் கனடா தேசத்தில் இருந்துபடைத்து வெளியிட்டு வரும் இவ்வேளையில் இப்பிரதேசத்தினை மையப்படுத்திய இவ்வறிஞரை ஈழத்து தமிழ் அறிஞர்கள் வரிசையில் முதன்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக நோக்கப்படுகின்றது.

இங்கு இவரது படைப்புக்களில் மேலைத்தேய நாடகநூல்களின் தமிழ்மொழி பெயர்ப்பு முயற்சிகள் அறியப்பட வேண்டிய அவசியமும் குறிப்பாக முதுகலைமாணி தேர்வின் முதல் கட்டத் தேர்வினை நிறைவுசெய்யும் பொருட்டும் இவ்வாய்வானதுமுன்வைக்கப்படுகின்றது.

**பொருளடக்கம்**

I. உறுதியுரை

II. முன்னுரை

III. ஆய்வு நோக்கம்

IV. நன்றியுரை

1.0 முதலாம் அத்தியாயம் - ஈழத்துப்பூராடனார் அறிமுகம்

1.1 பிறப்பும் கல்வியும்
1.2 பணிகள்
1.3 துறைகளும் பெற்ற சிறப்புக்களும்

2.0 இரண்டாம் அத்தியாயம் - - ஈழத்துப்பூராடனாரின் வரலாற்று நூல்கள்.

2.1 மட்டக்களப்பின் வரலாறு தொடர்பானவை
2.2 மட்டக்களப்பின் புகழ்பூத்த மைந்தர்கள் (தமிழறிஞர்கள்)
2.3 மட்டக்களப்பு வாழ்வியலும் வளமும்

3.0 மூன்றாம் அத்தியாயம் - இலக்கண நூல்கள்

3.1 மட்டக்களப்பு சொல்நூல்
3.2 தமிழ் இலக்கங்களும் தமிழ் தழீஇய வட ஒலி எழுத்துக்களும்
3.3 மின் கணனிக்குத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா?

4.0 நான்காம் அத்தியாயம் - செய்யுள் நூல்கள்

4.1 புலவர்மணிக் கோவை
4.2 ஈழத்து இரட்டையர் மணிமாலை
4.3 விபுலானந்தர் பிள்ளைத்தமிழ்

5.0 ஐந்தாம் அத்தியாயம் - உரை எழுதுதலும் ஆய்வு நூல்களும்
5.1 ஈழத்து செட்டிபாளயம் கணபதிப்பிள்ளைப் புலவரின் நூற்திரட்டு தொகுதி-1
5.2 தமிழினத் தாயகத்தரையை உண்டழித்த ஒன்பதாவது கடல்கோள் ஓவியம்
5.3 கல்லாடம் கற்று மல்லாடுவோம் சொல்லாடுவோம். (கல்லாடனார் செய்த கல்லாட இலக்கிய நூலின் ஆய்வுப் பார்வை)
5.4 யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் பாரத சக்தி மகாகாவியத்தில் ஒரு ஆய்வுக் கண்ணோட்டம்.

6.0 ஆறாம் அத்தியாயம் - மொழிபெயர்ப்பு நூல்கள்

7.0 ஏழாம் அத்தியாயம் - தொகுப்பும் மதிப்பீடும்

7.1 தொகுப்புரை
7.2 மதிப்பீடு
*. பின்னிணைப்புக்கள்